[4th March 1969

Stalls for Burma repatriates.

*110 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of shops occupied by the Burma Repatriates out of the 600 shops constructed for their sake;

(b) the number of shops lying vacant; and

(c) the number of persons who have been employed in the posts reserved for repatriates in the Industrial Training Centres?

பர்மா அகதிகளுக்குக் கட்டப்பட்ட கடைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பர்மா அகதிகளுக்காக கட்டப்பட்ட 600 கடைகளில் எத்தனை அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டன?

(இ) எத்தனை காலியாக உள்ளன ?

(உ) அகதிகளுக்கு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒதுக்கப் பட்ட வேலைகளை எத்தனை பேர் பயன்படுத்திக் கொண்டு வேலைக்கு அமர்ந்துள்ளனர் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1968 அக்டோபர் வரை கட்டப்பட்ட 517 பெட்டிக் கடைகளில் 377 பெட்டிக் கடைகள் பர்மா அகதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) 1968 அக்டோபர் 31 தேதியன்றுள்ளவாறு 140 பெட்டிக் கடைகள் காலியாக உள்ளன.

(உ) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் 1968-ம் ஆண்டுப் பள்ளிக் கால அளவில் பர்மா, இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப்பட்ட 470 இடங்களில், அவர்கள் 38 இடங்களை பயன்படுத்திக் கொண்டனர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, கட்டப்பட்ட கட்டிடங்கள் காலியாக இருப்பதற்குக் காரணம் என்ன? அவர் களுக்கு வர்த்தகம் செய்வதற்குப் போதிய கை முதல் இல்லாததால் காலியாக இருக்கிறதா ? அப்படியிருந்தால் அத்தகைய முதல் சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதனால் என்று சொல்ல முடியவில்லை. பொதுவாக இம்மாதிரியான கட்டிடங்களுக்கு சில பேர்தான் முன் வந்தார்கள். அதுவும் எத்தனையோ மாதிரியாக நோட்டீஸ் போட்டோம். பத்திரிகையில் விளம்பரம் செய்தோம். அப்படியும் ஒரு ஆண்டுக்கு மேல் நிறுத்தி வைக்கவேண்டாம் என்று எண்ணி, ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடங்களைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, அவ்வளவு பேர்தான் வந்தார்கள்.